கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 109 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குருமூரத்தி | வயது | 62 |
| தந்தை பெயர் | வெங்கடாசலம் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜர். .எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா1 2 வருட காலமாக என் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார். ஆஜர் எதிரியை தெரியும். சம்பவம் நடந்த அன்று அவர் அசா1ன் வீட்டிற்கு வந்திருந்தார் அப்பொழுதான் அசா1ன் கணவர் என்று தெரியும். கடந்த 09.03.2023 அன்று மாலை 06.30. மணியளிவல் நான் எனது வீட்டு வாசலில் அமர்ந்திருந்தபோது இவர் அசா1ன் வீட்டிற்குள் வந்தார். பிறகு நான் சத்தம் கேட்கவே உள்ளே சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அசா1ன் தலைமுடியை பிடித்து திட்டி மற்றும் அடித்துகொண்டிருந்தார். ஆஜர் எதிரியின் ஒரு கையில் அசா1ன் தலைமுடியும் ஒரு கையில் செருப்பும் இருந்தது. நான் இருவரையும் விலக்கிவிட்டபோது ஆஜர் எதிரி அசா1 யை குச்சிகாரி, தேவுடியா என தகாத வார்த்தைகள் சொல்லி திட்டினார். ஆஜர் எதிரி அடித்ததில் அசா1 பின் கழுத்து பகுதி, நெஞ்சு பகுதி மற்றும் முகத்தில் தேய்ந்த எலும்பு முறிவு காயம் இருந்தது. இரத்தம் கசிந்தது. ஆஜர் எதிரியை நான் விலக்கி விட்டபோது அசா1 யை பார்த்து நீ செத்தால்தான் நான் நிம்மதியாக இருக்க முடியும் என கூறிவிட்டு சென்றார். திட்டிக்கொண்டே வெளியே வந்துவிட்டார். நான் பிறகு அசா1 யை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தனர் என்றால் எனது வீட்டில்

வைத்து சம்பவ தினத்திற்கு மறுநாள் விசாரணை செய்தார்கள். விசாரணையின் போது போலிசார் நான் கூறிய சம்பவங்களை கையால் எழுதிக்கொண்டனர் என்றால் எழுதிக்கொண்டனர். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுக்குள் இருந்த பிரச்சனையை நான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். அசா1 எனது வீட்டில் தங்கியிருந்தற்கான வாடகை ரசீது போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அசா1 எனது வசிக்கவே வில்லை என்றால் சரியல்ல. அசா1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் அசா1 ஆண்டி பந்தலில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்ற விபரத்தை தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது., போலிசார் எனக்கு சாட்சி சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அசா1 யாருக்கு சொந்தமான செருப்பால் தாக்கபட்டார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் சம்பவம் எங்கு நடந்தது என்று கூறியுள்ளேன் என்றால் வீட்டு வாசலில் நடந்ததாக கூறியுள்ளேன்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 109 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | வயது | 34 |
| கணவர் பெயர் | முத்து | ஜாதி | |
| தொழில் | Tax Consultancy ஊழியர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

( எதிரி ஆஜர். .எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூரில் வசித்து மூன்று மாத காலமாக Tax Consultancy ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். எனக்கும் என் கணவருக்கும் 2016 ல் திருமணம் நடந்தது. 2017 ல் குழந்தை பிறந்தது. அதிலிருந்து என் கணவருக்கு வேறொரு பெண்னுடன் தொடர்பு இருந்ததால் கருத்து வேறுபாடு காரணமாக நானும் அவரும் பிரிந்து வாழ்கிறோம். 2018 ல் என் கணவர் என்னிடமிருந்து விவாகரத்து கோரி வழக்கு தொடுத்திருந்தார். விவாகரத்து வழக்கில் என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ முடியாது என்று கூறியதால் இடைகால ஜீவனாம்சமாக எனக்கு பத்தாயிரம் தருமாறு நீதிமன்றம் கூறியிருந்தது. உத்தரவிட்டதிலிருந்து 3 மாதம் மட்டுமே எனக்கு பணம் கொடுத்தார். பிறகு என் கணவர் அந்த வழக்கில் நீதிமனறத்தில் ஆஜர் ஆகததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எங்கள் இருவரையும் சேர்ந்து வாழுமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியதால் RDO Madam மற்றும் காவல் ஆய்வாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கடந்த 07.03.2023 ஆம் தேதி நான் ஆண்டிபந்தலில் உள்ள என் கணவரின் வீட்டிற்கு சேர்ந்து வாழ்வதற்காக சென்றேன். அப்போது வீடு பூட்டி இருந்ததால் நான் வந்துவிட்டேன். பிறகு 09.03.2023 ஆம் தேதி மாலை 06.30 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து என் கணவர் வந்து என் வீட்டிற்குள் வரும்போதே குச்சிகாரி, தேவுடியா என தகாத வார்த்தைகள் சொல்லி திட்டிக்கொண்டே எதற்காக என் வீட்டிற்கு வந்தாய் நான் உன்னை எப்போதும் வாழ வைக்க மாட்டேன் என்று தகராறு செய்தார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் முன் என்னை

அசிங்கபடுத்திவிட்டார். என் கணவர் காலில் கிடந்த செருப்பை கழட்டி எனது தலையிலும் முகத்திலும் அடித்துவிட்டார். அடித்ததில் எனக்கு மயக்கம் வந்ததது. எனது வீட்டின் உரிமையார் என்னை திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார். விவாகரத்து வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் நான்கு முறை சேர்ந்து வாழ நினைத்தபோது என்னை பலமுறை அடித்து அனுப்பிவிட்டார். நான் அவருடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் மீது புகார் கொடுக்கவில்லை. என்னை அவர்கள் ஆறு மாத காலம் அவர்கள் வீட்டு மாட்டுக்கொட்டகையில் தங்கவைத்து சரிவர சாப்பாடு கொடுக்காததால் நானும் என் குழந்தையும் அங்கு தங்க முடியாததால் வந்து விட்டோம். தற்போது நான் தனியாக சிறு சிறு வேலை பார்த்து கொண்டு வாழ்ந்து வருகிறேன். நான் பலமுறை என் கணவருடன் வாழ நினைத்தபோது என் கணவர் வேறு பெண்னுடன் தொடர்பில் இருந்து என்னுடன் வாழ மறுக்கிறார். 09.03.2023 அன்று நடந்த சம்பவம் தொடர்பாக நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர். என்னை விசாரித்து நான் சொல்ல அவர்கள் எழுதிக்கொண்டார்கள். நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிதார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் எந்த ஊரில் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்து வருகிறார் என்றால் திருக்கரை வாசலில் வேலை பார்த்து வருகிறார். மாங்குடி கிராமத்திற்கும் திருக்கரை வாசல் கிராமத்திற்கும் எவ்வளவும தொலைவு இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ்வதற்காக போடப்பட்ட வழக்கின் நகலை நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு நான் எனது கணவர் ஊரில் குடியிருந்தேன் என்றால் சரிதான். வைப்பூர் கிராமத்தில் குடியிருந்தேன். எதிரிக்கு வயதான தாயார் உள்ளார் என்றால் சரிதான். குழந்தையும் வைப்பூர் கிராமத்தில் பிறந்தது என்றால் எனது அம்மா வீட்டில் பிறந்தது. குழந்தை பிறந்ததும் என்னை வைப்பூர் கிராமத்திற்க அழைத்து சென்றார்கள். எனது தாயார் கொல்லுமாங்குடியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் எவ்வளவு காலமாக எதிரியை பிரிந்து வாழ்கிறேன் என்றால் 2018 முதல் பிரிந்து வாழ்கிறேன். பிரிந்து வாழ்ந்த காலக்கட்டத்தில் நான் சேர்ந்து வாழ்வதற்காக வழக்கு ஏதேனும் தொடுத்தேனா என்றால்

இல்லை. எதிரி என்ன காரணத்திற்காக என் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கார்த்திகா தேவி என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக என்னிடமிருந்து விவாகரத்து கேட்கிறார். நான் எதிரியை கொடுமை செய்வதாகவும் அவரிடம் சொல்லிக்கொள்ளாமல் அடிக்கடி சென்றுவிடுவதாலும் என் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் நடந்த HMOP 57/2019 வழக்கில் எனக்கு ரூபாய் 2120/- ஜீவனாம்ச தொகையாக உத்தரவிடப்பட்டு அதன் அடிப்படையில் மாதம் தோறும் எனக்கு திருவாரூர் வட்டாட்சியர் மூலமாக எதிரியின் சம்பள கணக்கிலிருந்து பிடிக்கப்பட்டு வழங்கப்படுகிறது என்றால் சரியல்ல. ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பேசப்பட்டு நான் எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்தால் வழக்கை திரும்ப பெற்று கொள்வதாக பேசப்பட்டது நான் தான் எதிரியுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எதிரி பஞ்சாயத்தார்கள் மனுவில் எதிரி ஆஜராகமல் இருந்தார் என்றால் சரியல்ல. நான் எதிரியுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் என்ன முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் நகல் எனக்கு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. போலிசார் மருதததுவமனையில் என்னை விசாரணை செய்த பின்பு மீண்டும் விசாரணை செய்தனரா என்றால் விசாரணை செய்தனர். நான் மாங்குடியில் குடியிருந்த வீடு யாருக்கு சொந்தமானது என்றால் குருமூர்த்திக்கு சொந்தமானது. அவர் சாட்சி சொல்ல வந்துள்ளார் என்றால் சரிதான். அங்கு எனது தாயார் நிரந்தரமாக வசிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கயைில் எதிரியின் முகவரி வைப்பூரில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது புகார் வாக்கமூலத்தில் எங்களுக்குள் என்ன கருத்துவேறுபாடு உள்ளது என்று கூறியுள்ளேனா என்றால் வேறொரு பெண்னுடன் தொடர்பில் உள்ளதால் கருத்துவேறுபாடு என்று கூறியுள்ளேன் அந்த பெண்ணின் பெயர் கூறியுள்ளேனா என்றால் இல்லை. அந்த பெண்ணின் முகவரி புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. பனங்குடியில் எதிரி எந்த எண் கொண்ட வீட்டில் வசித்து வந்தார் என்று நான் எனது புகார் வாக்கு மூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். பனங்குடி ஆண்டிபந்தல் கிராமத்தில் எதிரி வசிக்கவும் இல்லை நான் அங்கு சென்று பார்க்கவும் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை எந்த இடத்தில் செருப்பால் தாக்கினார் என்று நான் புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. ஆஜர் எதிரி காலில் இருந்த செருப்பால் என்னை தாக்கியதாக எனது புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. ஆஜர்

எதிரி என்னை செருப்பால் தாக்கவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலிசார் என்னிடம் கட்டை மற்றும் செருப்பை கைப்பற்றி காண்பித்தனாரா என்றால் கட்டையை மற்றும் காண்பித்தனர். என்னவகையான கட்டை எவ்வளவு நீளம் என்றால் கருவக்கட்டை நீளம் தெரியவில்லை, மருத்துவமனையில் நான் சேரும் போது என் கணவர் என்னை தாக்கியதாக நான் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள தகாத வார்த்தைகளால் எனக்கு அறிவருப்பு ஏற்பட்டதா என்றால் அறுவருப்பு ஏற்பட்டது. நான் மாங்குடி கிராமத்தில் வசிக்கவும் இல்லை ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் குருமூர்த்தி மற்றும் தேவகி சத்தம் கேட்டு ஓடி வந்ததாக நான் எனது புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை அவர்கள் அங்கு தான் இருந்தார்கள். அவர்கள் அங்கு இல்லை என்றால் சரியல்ல. நான் தான் திருக்கரை வாசலில் உள்ள எதிரியின் அலுவலகத்திற்கு சென்று அவரிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. அங்கு உள்ள கோப்புகளை நான் தான் தள்ளவிட்டு பிரச்சனை செய்தேன் என்றும் நான் மனைவி என்பதால் என் மீது வழக்கு கொடுக்காமல் இருந்தார் என்றும் நான் முந்திக்கொண்டு வழக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மாங்குடி கிராமத்தில் தற்போது வசிக்கவில்லை என்றால் என்னை வீட்டை காலி செய்ய சொல்லிவிட்டார்கள். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியுடன சேர்ந்து வாழ விருப்பம் இல்லாம ல் அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.